# விஸ்வகர்ம சனாதன தர்ம அறக்கட்டளை

**(RELIGIOUS TRUST)**

நமது அகில பாரத விஸ்வகர்ம மகாசபா தேசியதலைவர் மற்றும் தேசிய பொது செயலாளர் திரு.த.முருகசெல்வம் அவர்களின் நேர்காணல் தமிழின் நம்பர் 1 பெண்கள் இதழ் அவள் விகடன் இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

வெளிடும் நாள் இன்று : 17.05.2016



## புற்றுநோயை வென்று காட்டுவோம் !

கலாவதியின் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) கணவர் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுனர். சென்னை கொளத்தூர் பகுதியில் வசித்து வருகிறார் அவர். திருமணமாகி இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் குழந்தை இல்லை. இந்த நிலையில் ஆறேழு மாதமாக மார்பக பகுதியில் ஒரு சிறு வீக்கம் இருப்பதை கவனித்து வந்தார் கலாவதி.

அழுத்திப்பார்த்ததில் சிறு கோலி அளவிற்கு கட்டி இருப்பது போலத் தெரிந்தாலும் பெரிய அளவிற்கு வலி எதுவும் இல்லை. இருந்தாலும் அந்த கட்டி என்னவென்று பார்த்துவிட வேண்டுமென்று கலாவதியின் மனதில் அடிக்கடி தோன்றிக்கொண்டே இருந்தது. ஆனால் இதைப்பற்றி மற்றவர்களிடம் சொல்லுவதற்கு அவருக்கு வெட்கமாகவும், தயக்கமாவும் இருந்தது.

நீண்ட யோசனைக்கு பிறகு ஒரு நாள் பக்கத்து வீட்டு தாயம்மாவிடம் தனக்கு மார்பக பகுதியிலிருக்கும் பிரச்சனையைப் பற்றி தயக்கத்துடன் கூறினார். தாயம்மாவோ நடுத்தர வயது பெண்மணி. கலாவதி கவலையுடனும், தயக்கத்துடனும் கூறிய விஷயத்தை எளிதாக புரிந்து கொண்டார். "கலா கவலைப்படாதே... பக்கத்தில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கு, அங்கே மாதத்திலே ஒருமுறை பெண்களுக்கு இலவச மருத்துவ முகாம் நடத்துவார்கள். அங்கே போய் சோதனை பண்ணிக்கலாம், நான் விசாரித்து தேதியை சொல்கிறேன்" என்றார்.

அடுத்த வாரம் கலாவதியுடன் தாயம்மாவும், அந்த மருத்துவமனைக்குச் சென்றார்கள். அங்கு வயதான தாய்மார்கள், இளம் பெண்கள், முதியோர் என்று நிறைய பேர் வந்திருந்தார்கள்.

வரிசையில் நின்ற கொண்டிருந்த கலாவதி தாயம்மாவிடம் "அக்கா டாக்டர் ஆம்பளையா?" என்று தயக்கத்துடன் கேட்டார். "லேடி டாக்டர் இருக்காங்க..." என்று கலாவின் சந்தேகத்தை தீர்த்து வைத்தார் தாயம்மா. அவர் முறை வந்ததும் லேடி டாக்டரைப் பார்த்தார் கலா. டாக்டர் பல கேள்விகளைக் கேட்டு அவர் உடலை சோதனை செய்தார். அடுத்த அறையிலிருந்து மிஷினில் ஒரு படம் எடுத்துவரச் சொன்னார். "நீ கொஞ்சம் வெளியில் இரும்மா" என்று சொல்லிவிட்டு மற்ற டாக்டர்களிடம் ஆலோசித்தார். பிறகு கலாவை உள்ளே கூப்பிட்டார். "நான் சொல்வதைக் கேட்டு அதிர்ச்சி அடையாதே . பயப்பட வேண்டாம். உனக்கு கேன்சர் - அதாவது - புற்றுநோய் அறிகுறி இருக்கு. ஆரம்பத்திலேயே நீ வந்து விட்டதால் சுலபமாக குணப்படுத்திவிடலாம்" என்றார் அந்த லேடி டாக்டர். அந்த டாக்டரின் ஆலோசனைப்படியும், சிறப்பு டாக்டர் வழிகாட்டுதல்படியும் சிகிச்சை எடுத்துக்கொள்ளத் துவங்கினார் கலா. அடுத்த ஆறே மாதத்தில் மீண்டும் பரிசோதித்ததில் நோய் கட்டுப்படுத்தப்பட்டிருப்பது தெரிந்தது. தொடர்ந்து மருந்து சாப்பிட்டு வர நோய் அறிகுறியே இல்லை. இப்போது கலாவதியின் முகத்தில் கவலை மறைந்து மகிழ்ச்சி மலர்ந்துவிட்டது.

D.முருகசெல்வம்

"சரியான நேரத்தில் டாக்டரிடம் சென்றதால் தற்போது நலமாக இருக்கிறேன். மார்பக பகுதியில் வீக்கம் மற்றும் ஏதேனும் மாற்றம் தெரிந்தால் உடனடியாக மருத்துவரை பார்க்கவும். வெட்கப்படவோ, தயங்கவோ வேண்டாம். தாமதித்தால் உங்கள் உயிருக்கே ஆபத்து வரலாம்." என்று பெண்களை எச்சரிக்கிறார் கலாவதி.

கலாவதியைப் போல ஏராளமான பெண்கள் "யோகி ராம் சூரத்குமார் மெடிக்கல் பவுன்டேஷன்" (YRSK Medical Foundation) ஒரகடத்திலும் மற்றும் வில்லிவாக்கத்திலும் லயன்ஸ் கிளப்போடு இணைந்து நடத்தும் "டயக்னோஸ்டிக் சென்டர்" மற்றும் மருத்துவ ஆலோசனை மையத்தால் பயன்பெற்று இருக்கிறார்கள். விஸ்வகர்மா சனாதன தர்ம அறக்கட்டளையால் நடத்தப்படும் மருத்துவ மையம் இது. இந்த அறக்கட்டளையின் தலைவர் டி. முருகசெல்வம் கால் நூற்றாண்டு காலமாக கட்டிடத் தொழில் செய்து வருபவர்.

தனது அறக்கட்டளை மூலம் நூற்றுக்கணக்கான கோவில் திருப்பணிகள் செய்திருக்கிறார். ஏராளமான மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவி, பெண்களுக்கு இலவச கம்ப்யூட்டர் மற்றும் தையல் பயிற்சியையும் கொடுக்கிறது இந்த அறக்கட்டளை. "இன்று இந்தியாவில் இரண்டரை கோடி பேருக்கு புற்று நோய் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. வருடா வருடம் இந்த எண்ணிக்கை எட்டு லட்சம் ஏறுகிறது. ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 5 லட்சம் பேர் புற்று நோயால் இறக்கிறார்கள். இதில் சரிபாதி ஆண் - பெண். ஆண்களில் பெரும் பகுதியினர் வாய் மற்றும் நுரையீரல் புற்றுநோயால் இறக்கிறார்கள். பெண்கள் பெரும்பாலும் மார்பக மற்றும் கர்ப்பக்குழாய் புற்றுநோயால் இறக்கிறார்கள். புற்று நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடித்துவிட்டால் குணமாக்குவது எளிது. குறிப்பாக எங்கள் மருத்துவ மையத்தில் பெண்களுக்கும், முதியோர்களுக்கும் மிகக் குறைந்த கட்டணத்தில் சோதனைகளை செய்து புற்று நோய்க்கான அறிகுறிகளை கண்டறிந்து சிகிச்சைக்கும் உதவி செய்கிறோம்" என்கிறார் முருகசெல்வம். குழந்தையில்லா தம்பதிகளுக்கு தேவையான சோதனைகளை செய்து குழந்தை பிறப்பதற்கான (Fertility) சிகிச்சையையும் இந்த மருத்துவ மையங்களில் செய்கிறார்கள்

"28 விதமான புற்றுநோய்கள், ஆண் பெண்களை தாக்குகின்றன. குறிப்பாக பெண்கள் மார்பக மற்றும் கர்ப்பக்குழாய் புற்றநோய் குறித்த விழிப்புணர்வை பெற வேண்டும். மேமோகிராம் மற்றும் "பாப்"(Pap Test) சோதனை மூலம் மிக எளிமையாக பெண்களுக்கு மார்பக மற்றும் கர்ப்பக்குழாய் புற்றுநோய் அறிகுறி இருக்கிறதா என்பதை அறிந்து கொள்ளலாம். மார்பகத்தில் தோன்றும் சிறிய மாறுதல்கள் குறித்தும், உடம்பில் வேறேனும் பகுதியில் உள்ள வீக்கம், தொடர் தொண்டை கரகரப்பு, நீண்டநாள் குணமாகாத காயம், ரத்தக் கசிவு, தொடர் அஜீரணம், தொடர் இருமல் போன்றவைகள் இருந்தாலும் பெண்கள் வெட்கப்படாமல் டாக்டரிடம் ஆலோசிக்க வேண்டும். இந்த வகையில் நாங்கள் நடத்தும் இலவச மருத்துவ முகாம்களின் மூலம் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு புற்று நோய் அறிகுறிகளை துவக்க நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளித்ததின் காரணமாக காப்பாற்றப் பட்டிருக்கிறார்கள். விழிப்புணர்வு, நோய் அறிகுறி கண்டறிதல், தொடர் சிகிச்சை ஆகியவைகள் மூலம் புற்று நோயை வென்று காட்டலாம்" என்கிறார் முருகசெல்வம்.

கடந்த டிசம்பர் மாதம் வெள்ளத்தின் போது தனது வீட்டில் வெள்ள நீர் புகுந்தாலும் அதை பொருட்படுத்தாது பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணவு, அரிசி, மருந்துகள், பால் என்று கொடுத்து அனைத்து தரப்பு மக்களின் பாராட்டுகளையும் பெற்றிருக்கிறார் முருகசெல்வம்.

தனது அறக்கட்டளைக்காக யாரிடமும் இவர் நிதி வசூலிப்பதில்லை. தன் உழைப்பின் மூலம் கிடைக்கும் பணத்தையே அறக்கட்டளை செலவுகளுக்கு பயன்படுத்துகிறார். மேலும் விவரங்களுக்கு : 044-42808289


**MASTER HEALTH CHECK-UP @ Rs.1499.00**

| | | | |
|---|---|---|---|
| CT Brain Scan | 800.00 | Ultra Sound Scan | 300.00 |
| CT Chest Scan | 1200.00 | Doppler Study | 750.00 |
| | | Digital X-Ray | 150.00 |
| CT Whole Abdomen | 1700.00 | ECG | 75.00 |

**LAB**

| | | | |
|---|---|---|---|
| Fasting | 15.00 | Urea, Creatine, Total Chols (Each) | 40.00 |
| Sugar P.P. | 15.00 | | |
| Blood Grouping | 20.00 | Electrolyte | 125.00 |
| HB | 15.00 | HBAIC | 125.00 |
| E.S.R., TC, DC (Each) | 15.00 | Urine Complete anyalyse | 50.00 |
| | | Urine Culture | 100.00 |

ALL SPECIALIST DOCTORS AVAILABLE

All Diagnostic Facilities available

All Diagnostic at Very Lowest Cost

Advt